97

அமுதம்.

AMUDHAM
OR
THE SKETCH OF INDHRA.

By
Tamil Pandit, S. RENGAIENGAR.

PUBLISHED BY THE
Arunodayam Office,
ETAIYAPURAM.

1929.

Copy Right Registered.] [Pries As. 4.

OFFICE OF ... 4-JAN ...
Q2
N29
176807

காலிங்கராயன் அல்லது
கானகத்தில் நடந்த கல்யாணம்.
The Wedding in the woodland.

அருணோதயம் ஆசிரியரால் எழுதப்பெற்ற
அருமையான நாவல்.

துன்பம் வந்துற்ற காலை தெய்வத்தை நோவதும், அறத்தாற்றின்வழுவுவதும், மாந்தர் இயல்பெனவிளக்கி, அத்துன்பத்தினை பொறுமையோடு கடைபிடித்து அறநெறி பிறலாதுய்த்தலாலே, தெய்வம் மகிழ்வெய்தி துணைநின்று அல்லலை அகற்றும், நல்வழியில் உய்விக்கும் என்பதினை, வெள்ளிடைமலைபோல் விளக்கிக் காட்டும் சிறந்த நவீனகம்.

விரைவில் வெளிவரும். **விலை ரூ 1—8--0**

முன்னதாக தங்கள் பெயரை பதிவு செய்துகொள்வோருக்கு தபாற்செலவு இனம்!!

சந்தரவிஜயம்.

நாவல் உலகில் இதுவே தலைசிறந்ததெனின் மிகைப்படா. படிக்கப்படிக்க இன்பம் அளிக்கும் அலங்கார வசனங்கள் நிறைந்த அருமையான நாவல். 400 பக்கங்களுக்கு மேல் உள்ளது.

கரிசூழ்ந்தமங்கலம் ஸ்ரீ K. சங்கரநாராயணனால்
வரையப்பட்டது.

கூடிய சீக்கிரம் வெளிவரும். **விலை ரூ 2.**

முன்னதாக தங்கள் பெயரை பதிவுசெய்துகொள்வோருக்கு
தபாற்செலவு இனம்.

அருணோதயம் ஆபீஸ்,
எட்டயாபுரம்.

முகவுரை.

அமுதம் சாவா மருந்து. இதனைத் தேவர்கள் பாற்கடலைக்கடைந்து பெற்றனர். இவ்வமுதம் பெறும்பொருட்டு இந்திரன் பல முயன்றான். அவன் முயற்சியும் ஊக்கமும் உறு தெய்வ அநுக்ரகமும்கூடி, கடைசியில் இவ்வமுதத்தினைப் பெறுவித்தன. இதுவே இக்கதையின் கோள்.

இதனைமட்டும் கூறாது, அவன் இதுபெறுகின்ற காரணமும் பெறக்கொண்ட முயற்சியும் பேறும், ஆகமுக்கூறு செய்து நிரப்பினேன்.

இதனால், உலகிற் செல்வர் இயல்பும் செயலும், அச்செல்வத்தோடு அவர் தம் புகழையும் இழப்பக் காரணமாய் நிற்கின்றன என்பதையும்; இழந்த பின் பெருந்துயர்க் காளாய் அவர் அதுபெற முயல்வர் என்பதையும் காட்டினேன். இவற்றோடு, செல்வத்தமைதியும், நல்குரவின் தீதும், அருள் உடையார் இயல்பும், ஊழின் திறனும், பெரியார் பெருமையும், அவரை வழிபட மறந்தாரிடமும், ஒவ்வாத வரிடை உலாய்நிற்கவும் வேண்டிவரும் திறனும் பிறவும் கூறினேன்.

எனவே வெறுங்கதை மட்டும் நுதலி ஒழியாது, அதன் பயன் பிறர் துய்க்கும்படி என்னால் இயன்றவரை அமைத்துள்ளேன்.

பெரும் பொருளும் குற்றமின்றி யிருப்பதில்லை என்றபோது என் சிறு சொல்லில் குற்றமின்மை நினைக்கவும் ஹேதுவில்லை. எனினும், அவற்றைக் கழூஉவி நன்கு அமைத்துக்கொள்வர் அறிவுடையோர்.

ஆசிரியன்.

JAN 1929

அமுதம்.

176807

1-வது அத்தியாயம்.

இந்திரன் [illegible]லோக நாயகன். திசைகாவலர் தலைவன். வானவர் கோமான். பொன்மயமான அமராவதிக்கதிபன். காமதேனுவாதி பெரும்பொருள் படைத்தோன். கலப்பற்ற இன்பம் கனிந்த நிலையினன். வேண்டினார் வேண்டியதளிக்கும் தரு அவன் நாட்டில் அவனுக்கு நிழலாய் அமரும்.

இவன் தன்பால் செல்வம் மிக்கது போலக் காமமும் மிக்கவன். பூர்வம் அகலிகைக்கு ஆசைப்பட்டு ஓடி ஆயிரம் கண்கள் பெற்றான். ருக்மாங்தனைக் காதலித்தழியும் ஒரு தவசி மகளை ருக்மாங்த ரூபியாய்க் கூடிச் சாபமும் பெற்று மீண்டான். பின் ஒரு முனி பத்தினியையும் ஆவல்கொண்டு திரிந்தான். அதனை அறிந்த அவர், இந்திரிய நிக்ரஹனும் மேதாவியும் மகாசீலனும் ஆன; தன் சீடனைக்காவல்வைத்து விட்டு வெளிச்சென்றார். சீடன், இந்நிலை உண்மையறிவரிது என்று மறைவில் தன் உருவிட்டு, அக்குருபத்தினி உடலுட் பிரவேசித்து இந்திரன் வரவு நோக்கி இருந்தான். நிகழ்ந்ததை அறியான். இத்தேவர் கோமான் முனிவன் அற்றமே குறிக்கொண்டு உள் நுழைந்தான். அங்கு நின்ற அழகுருவை

ஆயிரம்கூறி இரந்தான். பாடெல்லாம் அகற்றிப் பரிவுகாட்டி பல்லையிளித்து நின்றான். உள்ளே அவளும் அவனுக்கு இசைந்து பாட எண்ணினாள். அவ்வெண்ணம்மேல் எழாது ஏதோ தடுத்தது; திணறினாள்; பின், நீதிகள் கூறி அவ்விந்திரனை விலக்கினாள். பார்த்தான் இந்திரன்; "முகமும் கண்ணும் ஆர்வம் காட்டுகின்றன. பேச்சு நீதிகூறி என்னை என் செயலைத் தெளிக்கின்றது. ஏன் இந்த விபரீதம்?" என்று உள் நோக்கி அறிந்தான்.

இப்போது, இவள் உருவிட்டோடித் தன் உருக் கொண்டெதிர்வந்த சீடன், "இந்திரா! பொறுத்தேன். இவள் உள் இருந்து உன்னையும் தடுத்து, இவளையும் காத்து, என் கடமையை நிறைவேற்றினேன். காமத்தால் கண் இழந்தாய். அறிவு கெட்டாய். முறையும் கோடி முதம் கெடவும் நின்றாய். தெருட்டாது அழிக்க அஞ்சி, இரங்கி உன்னை யிந்நிலை உயிருடன் காத்தேன். ஓடிப்பிழை. இனி இங்குறுவதும் உனக்கு நாசமே" என்று கூறினான்.

என்செய்வான் இந்திரன்? கையும் களவுமாக அகப்பட்ட கள்வன் ஆனான். கலங்கினான். திகைத்தான். இன்னது சொல்வது என்று அறியாது மனம் மருண்டான். ஒருவாறு தேறி, "இனி யிப்பிழைப்பட்டுப் பழி பெறேன்," என்று இசைத்துப் பெயர்ந்தான்.

திரிந்து பழியும் சாபமும் கணக்கில பெற்றலும், காமம் நீக்கும் திறத்தன்று. சிறுவர் தம் தாய் தந்தையர் அடிக்குத் தப்பவெண்ணி உடன்பட்டுக்கூறும் உறுதிமொழி போலாயின, இந்திரன் வார்த்தைகளும். பின்னும் பல காம சரிதங்கள் இவன்பால் நிகழாதொழிந்தில.

இன்ப மயமாய்’ முயற்சி வேண்டாது பலன் தரும் தகையதாய் நிற்கும் தருநிழலமராவதித் தலைவன், அவிந் திரன், கண் களிந்திடு மாதர் நாடகக் காட்சியும், தும்புரு நாரதாதியர் கருவியிற் கண்டத்தினெழுப்பும் பாடலுமாகிய அமுதமும் பெற்றின்புறு வானாயினன்.

இவன், இன்று, பவனி புறப்பட்டான். முன்னே வேத கோஷம் கடல் தோற்பித்தது. பின் ரம்பையாதி பேரெழி லாட்டியர் நடம்புரிந்தியங்கினர். சகலவிதமான ஆடம்பரமு மலங்காரமும் கொண்டு, அவன் கைமலை மேல் ஒரு நீல மலை வருவதுபோல, வெண்கரிமீதிலர்ந்து, தன்னிகரில்லா இன்ப வுள்ளத்தனாய்ச் செல்கின்றான்.

முனிவர் தேவர் பெரும்புகழரசர் முதலியோர் பலரும் போற்ற இனிது சென்று கொண்டிருந்த அவ்விந்திரற் கெதிரே, நீண்டதாடியும், நிமலவான் முகமும் உடையான் ஒரு முனிவன், கையிலொரு மாலையுடன் தோன்றினான்.

இவன் துர்வாசன். கோபத்தாலும் சாபத்தாலும் அழி யாத தவத்தாலும் நிகரற்றவன். இந்திராதி சகலராலும் போற்றப்படும் புண்யமூர்த்தி.

மாதர் உழையர் சூழ மகிழ்வு செழித்துத் தன்னையும் மறந்து செல்லும் வேந்தன், அவனை வழக்கம்போல் வரவேற்றிலன். முகமனாக ஒன்றும் மொழிந்திடவுமில்லை. சிறியோர் தம் செயல் மறந்தார் என்று பெரியார் ஒருமுறை பொறுதிருப்பாரு? பொறுத்தான் முனிவன். “நாம் பெற்ற இவ்வை ஜயந்திமாலை, திருமகள் கழுத்தில் அணிந்தது. இந்திரன் வேந்தன். இவனுக்கு வெற்றியும் மேதகவும் பொருளும்தரும் இது. முனிவனாய்க் காய்கனி அருந்திக் காலம் கழிக்கும் நமக்கு இதனால்வருவது என்? உரியார்க்கு உதவுக மற்றிது.” என்று கருதி, எனோர் அஞ்சி வழிவிடச் சென்றவனை அணுகி, மாலையை நீட்டி ஆசியும் புகன்று நின்றான்.

ஆடலும் பாடலும் அருந்தி இன்பம் செழித்து வீறிய அவ்வேந்தன் முனிவனை மதித்திலன். அவர் கூறும் ஆசியையும் ஏற்றிலன். மாலைச் சிறப்பினையும் கருதிலன். ஈந்தது பொறுதிருக்க மட்டும் எண்ணாது அதனைக் கைத்தோட்டியால் ஏந்தினான். கண்ணில் ஒற்றான். சூடான். அணியான். வேழ எருத்தின் விடுத்தான், ஊழ்வினை உருக்கும் காலம் ஆதலின் அப்பகடு அதனைத் தன் கையால் எடுத்து அடிப்படுத்துத் தேய்த்தது.

பொறுப்பார் என்று எண்ணியேயும் புரை தீர்ந்தார் மாட்டு வெறுப்பென புரிவாராகில், அவர், பின் பெருந்துயர் உழக்கவே செய்வர். குணம் என்னும் குன்றேறி நின்ற அப்

பெரியார் வெகுளி, நீர்கிழித்து எய்த வடுவும் மின்னலும் போல, க்ஷண நேரமே நிற்குமாயினும், எத்தனை 'பெரியரும் தாங்க முடியாததாக விழும்.

“விரிநிற நாகம் விடர் உள தேனும்
உருமின் கடும் சினம் சேணின்றும் உட்கும்
அருமை உடைய அரண் சேர்ந்தும் உய்யார்
பெருமை உடையார் செறின்.”

பெரியார் பொருக்கும் வரை பொறுப்பார். நீரும் மும்முறை தாங்கும் என்ப அதன் மேலர்யின்; அவர் கோபியாதென்செய்வார்? அதிலும் தன் முன்னே தர்ன் ஈந்த பெரும் பொருளை மதியாதெறிந்தது மன்றி, அதனைத் தன் ஊர்தி எடுத்தடிப்படுக்கவும் எண்ணாது கர்வித்திருந்தான் இந்திரன் என்பதை யறிந்தால், கோப முனிவன் எவ்வாறு பேசாதிருப்பான்? பொறுப்பான்?

அன்புடன் ஆக அன்பின்றியே ஆகுக, ஒருவன் தரும் கையுறையை அறிஞர் எவ்வாற்றானும் நிராகரிக்க மாட்டார். எந்நாட்டு எந்நீதியாளரைக் காணினும் எல்லாரும் ஒப்பவே இதுவிஷயத்திற் கூறுவர். அப்பெருந் தகமையும் இழந்தான் இந்திரன். அன்புடன் வந்து தனக்களிக்கும் பொருள் அற்பமானதாயினும், கொடுப்போர் அற்பரேயாயினும், அதனை யிகழாது ஏற்பதே அறிஞர் கொள்ப. பகைவனை தரினும் ஏற்பர். இக் கடமையும் மறந்தான். மூத்தோர் அறிஞர்

தவத்தோர், தரும் கையுறை மரியாதையுடன் ஒருவன் பெறக்கடவன் என்ப. அக்கடமையும் அகற்றினன். பல வழியாலும் தன் கர்வத்தால் மதிமயங்கிக் குற்றம் தேடிக் கொண்டான் அவன்.

"அருக்கன் தன் அறிவாக. அலந்த நீர்த்
திருக்கவின்ற செல்வச் செழுந்தாமரை
தருக்கெனப்படும் தின்பனி வீழுமேல்
முருக்கு மற்றதனை முகத்தாரினேய்."

ஒருநாள் ஒருவாற்று லொருவன் கொண்ட கருவம், அவன் பலநாள் பல முயன்றீட்டிய பெருமை செல்வங்கட்கு எல்லாம் இடியாய் நின்று தொலைத்துவிடும்.

"என்னையும் இகழ்ந்தாய். நான் தந்த திருமகள் மாலையையும் மதித்திலை. யானைக்காலில் மிதிபட விடுத்தாய். இந்திரா? இத்தனை தூரம் நீ கர்வித்துன்னை மறக்க ஹேதுவான உன் சர்வ வளமும் போய்க் கடலில் ஆழ்க. வறுமை சுவைத்து நீ வருந்துக. பெருஞ் செல்வத்துமயர்ந்து தருக்கியார்க்கு உற்ற மருந்து அவ்வறுமையே. வேறில்லை." என்று சபித்துத் திரும்பினான் முனிவன்.

பட்டாலன்றித் திருந்தார் பேதையார். முனிவன் கோபமும் அவன் தந்த சாபமும் கண்டான் இந்திரன். உள்ளம் கலங்கினான். "வளத்தால் மயங்கிப் பேறிழந்தேன். வறுமையும் பெற நின்றேன்." என்று வருந்தி முனிவனைத் தாள் பணிந்தான்.

பாம்பு படமெடாது படுத்தால் கயிற்றினை ஒப்பவே கருதுவர். கொட்டும்வரை தேளுக்கு மதிப்பில்லை. பிள்ளைப் பூச்சிக்குத் துல்யமாகக் கருதப்படும். கனல் குறுகிய சிறு கங்காங்காலைக் காலால் தேய்ப்பர். அஞ்சார் எவரும் பின் அவரே, அது வளர்ந்தோங்கி எரித்திடும்போது, கூட்டம் கூடிப் பல முயன்று அது தணிக்க வருந்துவர். கள்ளி வளர்ந்தால் இடமெல்லாம் கவர்ந்து முள்ளு முடைத்தாய் வழிதடுக்கும். துயரும் தரும். என்பதறிந்தும் இகழ்ந்து அதனை வளரவிட்டுக்கொண்டு ஆயிரம் செலவிட்டும் தீர்க்கரி தாய் மூள வருந்துவர். அதை முன் செய்யாதிகழ்வர். இது உலக இயல்பு.

கோபம் உடையவன் முனிவன் என்று அறிந்தும் அவனைக் கோபமூட்டாது அனுப்ப முன் மதித்திலன் வேந்தன். அவன் சினந்து சபித்தபின், அவனைப் பணிந் திரக்கலானான்.

முனிவன் முன் கோபி. பின் வருந்துதல் கொண்டான். “திருமகள் மாலை யிகழ்ந்தாய். திருவற்றாய். வேந்தனே! அவள் நாதனுதரவால் வறுமை நீங்கி உய்கநீ” என்று விடை தந்தகலப் போனான்.

தருக்குதல் போயிற்று. இன்பமழிந்தது. முகமொழி மழுங்கியது. உள்ளமும் கவலை மூண்டது. தேக பலமும் தவர்ந்து கால் நடுங்கினன் இந்திரன். வெண்டளத்தூன்றிய கருங்கட்டைபோல ஐராவதமேறி அரண்மனை அடைந்தான்.

2-வது அத்தியாயம்.

வியாழன் தேவகுரு. பொன்னன் புகரோன் எனவும் படுவான். இராஜநீதி வல்லவன். மகாமேதை. புதன் தாயின் கணவன். அக்கற்பக நாட்டுக் காணியாய், அக்காவலற்கான கொழு கொம்பாய் நின்றான் அவன். அசுரர் உயர்வுக்கு எல்லாம் ஆஸ்பதமாய் நிற்கும் அச்சுக்ரன்போலத் தேவர் உயர்வுக்கு எல்லாம் காரணன் இவனேயாய் விளங்குவான். தீமையிற்புகுத்தி அசுரரையவன் உயர்த்தித் தேவரைத்தாழ்த்திய போதெல்லாம், இவன் சீலம்போற்றித் தேவர் உயர வழி கூறி அவரை உயர்த்துவான். அழிக்க முயன்றழிப்பதினும் அழிதரும் தகைய தொன்றை யழிவகப்பட்டொழியாது காத்துய்த்தலே பெரிது. அத் தகு செயலில் வீறிய பெரியான் வியாழன்.

கற்பக நிழலில் ஒருமுழையிப் பேரறிவோன் அமர்ந்து வந்தான். இடையறாது வேதம் கோஷிக்கும் அங்கு. சீடர் பலர் பலதுறைகளிலாங்காங்கு பயின்றுகொண்டிருப்பர். வியாழனும் தன்னிடைவந்த முனிவரர் அறிஞருடன் அளவளாய் மகிழ்உறுத்துவான்.

இந்நிலை யிவ்வாசிரமத்து அமரர் தலைவன் வந்தான். "சகல புவன நாயகா! மன் இன்னல் இருக்கைக்கு எளியோரின் இன்றெய்தினை. ஏன் முகம் ஒளி கருகினை. மகா தேஜஸ்வியான நீ யிவ்வளவு முகக்கருக என்ன நேர்ந்தது? அசுரர் தோற்பித்தாரா? முனிவரர் எதிர்ந்தாரை ஏற்றுபசரிக்கமறந்து சாபம் பெற்றனையோ? தீரா இடர்ப்பட்டாய்போல உருச் சிதைந்துளை நீ. ஏன் இம்மாறுபாடுகள்?"

வியாழன் இது விளம்பவும், இந்திரன், ஏதும் பேசரிய துன்ப நிலையன், கண்களில் நீர் ததும்ப நின்றான். "ஸ்வாமி! பெரும்பொருளால் தருக்கி, வளம் எலாம் இழந்தேன். வறுமைப்பட்டேன். மணியும் பசுவும் தருவும் அரம்பையரும் ஆய என் வளம் போய்க் கடலிற் கரந்தன. வெறுநிலைப்பட்டு நான் மெலிகின்றேன். உங்கள் அருளாலேயே, நான் என் பூர்வ நிலைபெற வேண்டும்" என்று அவன் இரந்தான்.

"மாறுதல்களை அறிந்தேன். மயங்கினேன். நீயே வந்தனை. என்ன விளைந்தது?"

"என்னென்றுரைப்பேன்? பவனிபோம்போது எதிர் வந்தார் துர்வாச முனிவர்."

"யார்? துர்வாச முனிவனா? ஏற்கெனவே கோபிஷ்டனாயிற்றே? அவனை வழிபட மறந்தனையா? அது பொறாது சபித்தொழிவானே. என்ன நடந்தது? சீக்கிரம் சொல். என் உளம் பதறுகிறது, துர்வாசன் வந்தான் என்று சொல்லவே."

"முனிவரை யிகழின் நனிவரும் தீங்கு என்பதை அறிவேன். அறிந்தும், என் அறியாப் புன்மதியால் அவர் தந்த

மாலையை ஏற்றுக் கரித்தலையில் இட்டேன். என் ஊழ்வினையால், அஃது எடுத்ததனைத் தன் அடிப்படுத்துத் தேய்த்து விட்டது."

"ஐயோ! இத்தனை நடந்தால் அவர் மிகக்கோபித்திருப்பாரே. என்ன சபித்தார் அவர்?"

"வளம் எலாம் இழந்து வறுமைப்படுக என்றார்."

"விமோசனம் ஏதும் விளம்பிலரா?"

"சொன்னார். தூமணி வண்ணனாற் பெறுக என்றார்."

"வந்த துயரை யநுபவியா தொழிக்க முடியாது. சென்று பிரமனைக் காண்போம். தூர்வாசன் சாபம் நலமே தரும்." இருவரும் பிரமன் உழை ஏகினர்.

3-வது அத்தியாயம்.

பிரமன் உலகப் பிதா மகன். உறுபொருள் உலகு எல்லாம் அருகாது படைப்பவன் அவன். ஆதியில் திருமாவின் நாபீ கமலத்திற்றோன்றி நாற்புறமும் நோக்கி நான் முகம் பெற்றோன். கலைமகள் நாதன். வேதம் தவழும் நாவினன். சத்யலோகம் அவன் இருப்பிடம்.

தன்னை வந்தடைந்த இந்திர வியாழரைப் பார்த்து அவன் இனிது கூறி வரவுக் காரணம் விஜாரித்தான்.

வியாழன் இந்திரனுக்காக நிகழ்ந்தன எடுத்துத் தெரிவித்தான்.

"செல்வம் மிக்கபோது இதுதான் இம்சை. கண் தலை தெரியாது துள்ளுகிறது பின், துன்பம் உழந்து தவிக்கிறது.

ஆதிநாள் முதல், இதுவே, அப்பொருட்கு அமைதி. துன்பாஸ்பதமாய்த் தீநடைச் சாதனமாய்ப் பழித்துச்சிலாய் நின்றாலும், அப்பொருளின்றி, எவ்வுலகத்து எதுவும் நடைபெறலரிதாகின்றது. இல்லாக்காலை இகழப்பட்டு எரிவாரும், அப்பொருளினைப் பெற்றவுடன் தலைகிருக்கி முறைகெட்டு அல்லனபுரிந்து பழிக்காளாவர். பெறலரிய பெருந்திருப் பெற்ற இவ்விந்திரன் எத்தனைமுறை காம பீடிதனாய்க் கருத்தழிந்து பழிபெற்றான்? பெரியாரை யிகழ்தல் தீநடைப் புகுதல் ஆதியவற்றாற்றாமே கெடும் அச்செல்வரை பிறரும், அப்பொருள் அவர் நடை முதலிய கருதித் தாக்கித் தாழ்த்தவும் தொடங்குவர். பலவகையான துன்பத்துக்கும் உடையயரே மிகுபொருள் உடையவர். இந்திரா! பெரியாரை யிகழ்தல் அவர் தரும் பொருளை அற்பமா மதித்தல் இவை செய்தார்க்கு, இதோ, நீ எடுத்துக்காட்டாயினை. இவ்வியாழனொடும் என் உழை வந்தாய். ஊழையார் ஒறுப்பார்? வா. பரமசிவனைப் பார்ப்போம். அவன் கூற்றுணர்ந்து ஆவனபுரியலாம்.” என்றான் வேதியன்.

4-வது அத்தியாயம்.

அடைந்தார் ஆகுலம் தீர்த்து நலம் தரும் சங்கரன், தன்னை வணங்கினரிற் பிரமனை வரவேற்று உபசரித்தான்; வியாழனை இன்னுரை கூறி ஆசி புகன்றான்; இந்திரனுக்கு இது கூறினன்: “வாய்த்த வளம் காக்க அறியாது இழந்து வந்தாய். வாசவா! செல்வம் நல்லறம் ஆற்றிச்செறி புகழ் பெறத்தக்க சாதனம். அஃதொன்றில்லார், எனை நலன் உடையாராயினும், பலன் இல்லாராய் வருந்துவர். அவர் பல நினைப்பர். முடிக்கமாட்டாது அயர்வர். இல்லாமையால் உள்ளம் வருந்தாது செல்வம் நிரம்பிய காலைச்செறி புகழ்

பெறுதல் அறியாது இழுக்கி அதனையும் இழப்பாரிற் பேதை யார் இலர். முனிவனையிகழ்ந்து நனிமிக மெலிந்தனை. அவன் இறுத்தாங்கு மாலவனால் அன்றி இழுந்தவை பெறல் அரிது. வா. பாற்கடல் சேர்ந்து, அப்பரமனைக் காண்போம்.

5-வது அத்தியாயம்.

எனவே, யாவரும் பாற் கடற்கரை வந்து புகுந்தார்.

அங்கு ஆயிரம் தலையின் அரவப் பாயலிற் செய்யவள் நீளை என்றிரு மனைவியர் உடன் அமரப் பரமன் நீலமலை போல் அறிதுயிலமர்ந்திருந்தனன். சங்கராதியர் புகழ்ச்சி செவிப்பட்ட உடனே துண்ணெனவெழுந்து வெளிவந்தவர் களை முறை முறையே வரவேற்று உபசரித்தமர்ந்தான் அம் முகிலோன்.

அவனிடம், மாமதிமிலைந்த வேணியம்பரமன் இந்திரன் நிலை எடுத்துக் கூறினான்.

"செய்வன செய்யாது கெடுவதினும், எவரும் செய்யத் தகாதன செய்வதனாற் பெரிதும் கெடுகின்றனர். பாற்கடலிற் புகுந்தன பொருள்கள். எவ்விதம் எடுப்பது? ஒன்றே உபா யம் உளது. கலக்கினால், *இதனை மத்திட்டுக் கடைந்தால், இழுந்தன பெறலாம்." என்றனன் மாலவன்.

"கடலை மதிக்க மத்தெங்கே தேடுவது?" என்றார் பிறர்.

---

* இக்காலம் பகவான், விகுண்டை என்பால் பொருட்டு வை குண்டம் படைத்து அங்கு அஜிதரூபியாய் அமர்ந்தான் என்றும், அந்த ரூபத்தோடேயே கடல் கடைந்தான் என்றும் நூல் கூறும்.

"ஏன்? மந்திரம் உளது. எடுத்துவந்து இட்டால் வாசுகியைக் கயிருகக்கொண்டு கடல் கடையலாம். இழந்தன எல்லாம் இனிது பெறலாகும்."

"ப்ரபோ! மலை தூக்கிக் கடலில் இட்டுக் கடைக; கடைந்தால் இழந்தன பெறுவீர்" என்று ஆக்ஞாபித்தீர்கள். பெற முடியாதென்று பேசுவதற்குப் பதிலாக இப்படிச் சொல்கிறீர்கள்போலத் தோன்றுகிறது. நீங்கள் நினைத்தால் ஆகாதது என்ன இருக்கிறது. உங்கள் அடிமையாய், ஏழையாய்த் தானே எதனையும் முடித்துக்கொள்ளச் சக்தியற்றவனாய் நிற்கும் என்னை நன்கே அறிந்திருந்தும் சோதிக்கின்றீர்களா?" என்று பணிந்தான் இந்திரன்.

"பின் என்ன செய்யக்கூடும்? உள்ளதைச் சொன்னால் சோதனை என்கிருய். மலைநட்டுக் கடைந்தால் அன்றிப் பொருள்பெற முடியாது. திண்ணம்."

"ப்ரபோ! அதிலும் மந்தரம்தானு வேண்டும்?"

சிறு தாழிக்கு இத்தனை மத்தானல் இப்பேராழிக்கு எத்தனை வேண்டும்? அறியாது கூறுகின்ருயே. மந்தரம் தூக்கியிட்டுக் கடைந்தால்தான் பொருள் பெறலாம். வேறு உபாயம் இல்லை. கலக்க நான் வருகின்றேன் துணை. மலை கொண்டு கடலில் இடுவதும், ஓடதி நிறைப்பதும் உன் பாரம்."

"ப்ரபோ! தேவரெல்லாம் கூடித் தூக்கினும் துளங்காதே மந்தரம்!"

"அதற்கு நான் என்ன செய்யலாம்? உள்ளதைப் போற்றமாட்டாது, ஒருநொடியில் போக்கிவிட்டாய். பின் வந்தித்தனை வருந்துகின்றாய். என் செய்வது? அசுரரைக் கூடியாவது மலையினை எடுத்துவந்து கடலில் இடுதல் வேண்டும். ஆத்திரம் உடையோர் எப்படியாவது காரியத்தை முடிப்பார். உன்பொருள் பெற நீ உண்மையில் விருப்பம் உடையையானால், போ, அசுரரைக் கூடியாவது மலையை எடுத்துவந்து கடலில் இடு."

மலை தூக்கவே அஞ்சினான் வாசவன். 'ஆகாத அசுரரைக்கூடு. மலை தூக்கு,' என்றான் ஐயன். என் செய்வான் அவன்?

"ஆகாததை யாற்று. அதனால் இழந்தன பெறுவாய் என்று ஐயனே மொழிந்தால் அடியனேன் என்ன செய்வேன்? குலப் பகைவரான அசுரரை நான் கூடுவது எவ்வாறு? என்னை அறியினும் கொன்றுவிடுவாரே அவர். அப்புறம் உறவாடுவதும் மலை தூக்குவதும் எல்லாம் எப்படியாகும்? ஐயோ! இப்படியும் எனக்கு நியமிப்பீர்களா? பொருளை யிழந்ததுபோல உன் உயிரையும் இழ என்கின்றீர்களே." என்றரற்றினான் அப்புரந்தரன்.

இரங்கினான் விமலன்: "யான் உனக்கு ஹிதமே கூறுகின்றேன். தேவரினும் வர பலமும் தேக பலமும் மிக்கவர் அவ்வசுர வர்க்கத்தினர். அவரால் மந்தரத்தைத்தூக்கி வந்து கடலில் இடு. மகாபலி நல்ல குணம் உடையவன். பகைவனே ஆயினும் அடைந்தோரை யாதரிப்பவன். கூசாது சென்று உறவாடு. 'கடல்கடைந்தால் அமுதம் எழும். அதில் உனக்கும்

பாகம் தருகிறேன்.' என்று மெள்ள ஆசைகாட்டு. உபாயத்தால் அவனை உன் வசப்படுத்து. பின் காரியம் எளிதே நிரம்பும். செய். வெற்றிபெறுவாய்."

"ப்ரபோ! எலி பாம்பைக்கூடி உறவாடுவதுபோல, நான் அவனிடம் போய் உறவாட வேண்டுமா?"

"இந்திரா! பூர்வம் தவளை ஒன்று தனக்குத் துயர் தந்தாரைக் கொல்லப் பாம்பைத் துணைக்கொள்ளவில்லையா? ஏன் மயங்குகின்றாய்?"

"ஆனால், கடைசியில் அது பெற்ற கதிதானே நானும் பெற வேண்டிவரும்?"

"இல்லை. காரியம் ஆம்வரை யவர் உதவி பெறுவோம். காரியம் ஆனபின் எப்படியாவது நம்மைப் பிரித்துக்கொள்ளலாம். தளராதே."

"என்னவோ? என்னால் ஆவது எதுவும் இல்லை. தங்கள் ஏவலின் வழியே நடக்கின்றேன்."

"எம் ஏவலின்படி புரிவோர் எவரும் தீது அடைய மாட்டார். நலமே பெறுவார், போ. ஏவலைச்செய்."

என்று கூறி, விடைபெற்று, அவ்விஷ்ணு மறையப், பிரமனும் அரனும் தத்தம் இருப்பிடம் போயினர். குருவும் சீடனும் பொன் உலகு புக்கனர்.

6-வது அத்தியாயம்.

அரி பெயர் மாற்றித் தன் பெயரே யெங்கும் எவரும் சொல்லும்படி ஆணையிட்டு, அதன்படி உலகம் நடக்கக்கண்ட

இரண்யனை, அரசன், சர்வலோக நாயகன், தன் தந்தை என்றும் அஞ்சாது, அவனுக்கு விரோதமாவதையும் கருதாது அரி பெயர் ஓதிய பெருந்தகைப் பிரஹலாதன் பேரன் மகாபலி. இவன் தந்தை விரோசனன். 'நடலை வானவர் நான் மறையாளர் தன் உடலை ஏற்ப உதவியவன் இவன். இவ்வைரோசனன், மகாபலிஷ்டன். அறிவுமிக்கவன். பாட்டனுக்குதவிய பகவானிடம் அத்யந்த அன்புவாய்ந்தவன். அரசனுயினும் சீலம் கடைப்பிடித்த செறிபுகழோன். குலகுருவாகிய சுக்ரன் உதவியால் யாகம் பல செய்து செழித்தான்.

ஒருநாள் இந்திரன் இவனிடம் வந்தான். பகைவன் அகப்பட்டால் அசுரர் சும்மாவிடுவாரா? அவனைப்பிடித்து இம்சிக்கத் தொடங்கினர்.

அறிந்த மாபலி அச்செயலைத் தடுத்து அவனைத் தன்பால் அழைத்துப் பலவிதமாக உபசரித்தான்: "பெறுதற்கரியவானைக் கைவிட்டு, வருந்திய முகத்தினையாய் இங்கு பகைப் புலமாவதறிந்தும் வந்தது ஏன்? ஏதோ பேரிடர் உற்றனை போலும்."

"கற்பகம் முதலிய பொருள்கள் எல்லாம் வாரி புக்கு ஒளித்தன. வறுமைப்பட்டேன். உன்உறவு பெற்றால் அன்றி உயிர் பெறேன். உறுபொருள் பெறலுமரிது. எனவே, உன் நட்பினை எண்ணினேன். இதுவே என் வரவுக்குக்காரணம்."

அருகிருந்த சுக்ரன், இதுகேட்டு எழுந்து, "மன்னவா! வேந்தன், மெலிந்தான், வந்தான், நட்பு நாடினான் என்று கருதுவது பேதைமை. பகைவன் உறவாவது உண்டா? உபா

யம் உள்ளூறத் தூங்கப் புறத்தது நட்பு. இதனை நீ நம்புதல், இவனுடன் நட்புறல், உனக்குக்கேடாகவே மூளும்" என்று மொழிந்தான்.

"ப்ரபோ! பொருள் கெடுத்து நம்மால் உறுகுறை தீரும் எண்ணத்தன் இவனல் நாம் கெட நின்றது எதுவும் இல்லை. மேலும் நம்மை வந்து அடைந்தான். இவனை ஆதரியாது புறம்போக்குதலிற் பேதைமை பழிஉண்டா? ப்ரபோ! நம் குலப் பகைவனே இவன். ஐயம் இல்லை. நம்மைக் கெடுக்கவே சூழ்ந்தாலும் சூழ்ந்திருப்பான். இவன் சூழ்ச்சியே பலித்து, அதனல் நான் கேட்ட பெறினும் மானம் இல்லை. இவனை, உங்கள் சொற்படி, அகற்றுதல் எனக்கு மனம் இல்லை."

"நம்முடைய வீட்டில் வந்து விழுந்தது தீ என்று அவியாது பார்த்திருந்தால் வீடு வேகாது, ஒழியுமா? பூராயமாய் அறிந்திருந்தும் பகைவனுக்கு இடம் கொடுப்பது ஏற்றதில்லை."

"அறிந்தேதான் நானும் கூறுகின்றேன். எத்தனை கொடியவன் ஆனலும், தன்னையே கொல்ல வந்தவன் ஆனலும், அஞ்சி நீயே தஞ்சம் என்பானகில் அவனையகற்ற விதி உண்டா? பாட்டனிடமே வேண்டுமாயினும் கேட்போம். அவர் சொற்பழுதாகாது."

"உன் இஷ்டப்படி செய்துகொள். பின்வரும் துயர். படுவனும் நீயே."

"ப்ரபோ! இது வாஸ்தவம்தான். ஆனல் என் பாட்டனர் பரமபாகவதர். அசுரகுல காதகன் ஆன திருமால் என்

குலதெய்வம். என் இஷ்டதெய்வமும் அவனே. எனக்கு இவ்விந்திராதி அற்ப பல முடையவரால் என்ன தீங்குவந்து விடப்போகின்றது. உங்கள் சஞ்சல புத்தியும் தீராத சந்தேகமும் எவரையும் நம்பவிடாது செய்கின்றன உங்களை. அதனால் இது கூறுகின்றீர்கள்.

வாசவா! அஞ்சாதே. நான் என்னைத் தஞ்சம் என்றுரை என் உயிரைக் கொடுத்தும் காப்பேன். நீயே நமுசி யாதி அசுரரை அழித்தாற்போல வஞ்சனையால் என்னை மாய்ப்பாய் ஆயினும் அஞ்சேன். அறமாற்றி அதனல் அழியினும் அழியா நரகு புகுவதாயினும் புகழேயாகும் அஞ்சாது இரு. உன்பொருள் பெற்று நீ உயரும் காறும் என் இல் உனதில்லமே. நீ என் துணைவன். உன் துயர் ஆவன என் துயர். இனிது இங்கு இருந்தருள் நீ" என்று புகன்றான் மாபலி.

தைத்யகுலோத்பவன் பேச்சு அமரர்க்கரசனை வெள்குவித்தது, குலம் என் செய்யும்? ஒழுக்கமும் குணமும் கொண்டு உயர்ந்தார் தம்குலத்தையும் உயர்த்துவர். நல்லார் உயர்ந்தாரை உடைமையாலேயே குலம் ஏற்றம் அடைகிறது. "ஆக்கும் அறிவான் அலது பிறப்பினல் மீக்கொள் உயர் விழிவு வேண்டற்க." வசிட்டன், பராசரன், வியாசன், கேசகம்பளன் சிருங்கி, நந்தன், கண்ணப்பன், ஏகலைவன் முதலான எனையர் ஒழுக்கத்தால் உயர்ந்தார்? பெருந்தகையாளன் ஆன பலிதன் பேச்சால் பெருமை தோற்றுவித்தான்.

அதுகண்டு உவந்த இந்திரனும், "உயிர்பெற்றேன் ஐயன் உரைத்தபடியே அசுரனும் உறவு ஆனான்." என்று கருதி உளம் வீங்கினன்.

இவனைக் கொல்லும் துணைக் கோபம்உடைய அசுரரும் கூட இப்போது அவ்வெண்ணம் விட்டு அன்புடன் நடந்து கொண்டனர். தலைவன் விரும்பிய ஒருவனை அடியவர் வெறுப்பரா? உள்ளூறப் புகைந்தாராயினும் வெளிப்பட உபசாரம் பேசலில் குறைந்திலர் எவரும்.

7-வது அத்தியாயம்.

பூனைகளுக்கு மத்தியில் எலி நிராடங்கமாகப் பல நாள் கழித்தது. எவ்வித இடைஞ்சலும் இல்லை. எனினும் இந்திரன் உடல் மெலிந்தான். அதுகண்ட மாவலி, "வாசவா! ஏன் சில நாளாக முதம் இன்றி உடல் மெலிந்து நிற்கின்றனை? அசுரர் இங்கு எவராவது ஏதாவது புகன்றாரா? ஆசாரியர் ஏதேனும் அவமானம் உறமொழிந்தாரா? சொந்த நாட்டையடையக்கொண்ட கவலையோ? அன்றி இழந்தன பெற மார்க்கமில்லையே யென்ற ஏக்கமோ? உள்ளதை வெளியிடு. உன் குறை தீர்க்கும் அளவும், உன் முகத்தில் செழிப்பு ஏற்படும் வரையும் எனக்கு மகிழ்வு உண்டாக இடம் இல்லை." என்று விசாரித்தான்.

இந்திரன், சமயம் கிடைத்தது என்று உள்மகிழ்ந்து, "அசுரேசா! உன் ஆதரவில் நான் என் ஊரில் இருப்பதினும் அதிக மகிழ்வு பெறுகின்றேன். எக்குறையும் இலேன். எனினும், கடலிற் புகுந்தன பெறுவதை எண்ணியே என் மனம் கவலைமிக்கது. உடல் மெலிகின்றேன். மந்தரததைத் தூக்கிப் பாற்கடலில் இட்டால் என்பொருள் கிடைக்குமாம். திருமால் பணித்தருளினர். இதை எவ்விதம் உன்னிடம் சொல்வது என்று ஏங்குகின்றேன்." என்றான். [தொடரும்]

"இதுதானு? எங்களில் ஒவ்வொருவரே உலகம் எல்லாம் ஒருகை ஏந்தும் உரத்தினர். ஒரு மலை தூக்கவும் மாட்டாரா? அஞ்சாதே. நான் உதவுகின்றேன். என்னை யடைந்தும் நீ மனக்கவலைப்படுவது அழகில்லை." என்று தேற்றிய மாவலி, அசுரரை விளித்தான்.

" இந்த வாசவன் பொருள்கள் போய்க் கடலிற் கரந்து விட்டன. இவன் அவை பெற விரும்புகின்றான். நம்மை யடைந்தவனை நாம் ஆதரியாதிருப்பது அழகில்லை. அதற்கு மந்தர மலையைத் தூக்கிப் பாற்கடலில் இட்டுக் கடைய வேண்டுமாம். நீங்கள் எல்லாம் இருக்கும்போது, உங்கள் தலைவனான நான், என் தோழன் துயர்தீர்க்கமாட்டாது உழல்வேனு? சென்று, அம்மந்தரத்தை வேரொடும் வாங்கிக் கடல் நடுவில் இடுங்கள். நானும் வருகின்றேன். தேவர் உடன் பட்டு வந்தால் வரட்டும். இல்லாவிட்டால், நாமே கடைந் தெடுத்துக்கொடுப்போம்." என்று கூறினான்.

"இதில் நமக்கு என்ன லாபம்? ஏந்தலே! வெற்றவெறும் சொல்– 'பகைவனுக்கும் உறுதுயர் நீக்கினான் மகாபலி' என்ற ஒரு வார்த்தை–அல்லால் வேறென்ன உண்டாகும்? கிடைப்பதில் நமக்கு ஏதாவது பாகம் உண்டா? பலனற்ற காரியத்தில் நீயும் முயல்வாயோ?" என்றான் ஓரரக்கன்.

ஏனையசுரருமரக்கரும் எல்லாம் அதே கூறலாயினர்.

"அவன் பொருள் அவன் பெற நாம் முயல்வதில் பாகம் கேட்பது என்ன நியாயம்? அவனத்தனை பொருளினும் நாம் அவனுக்கு உதவிப் பெறும் அச்சொல்லிலை மிக்கது. எளிதே

கிடைப்பது மன்று. பிறர் பெறுவது முடியாததனை. அப்பாகம் நாம் பெற நினைப்பதே அப்பெரும் புகழ்கொடுக்கும் நஞ்செனமதிக்கிறேன்'' என்று அம்மாவலி கூறி முடிக்கும் முன், வாசவன் "கிடைக்கும் சாவா மருந்து. அவ்வமுதிற் பாகம் நீவிரும் பெறுவீர்'' என்றான்.

யாவரும் உடன்பட்டனர். சுக்கிரன் தடுத்தான். "வஞ்சகம். வாசவன் நம்மால் தன் பொருள் பெற விரும்பினான், வேறில்லை. நிச்சயமாய் நமக்கு அமுதம் தரான். இவனே தரினும், இவனை இங்கு ஏவிய மாயோன் தரவிரும்பான. இதனை நம்பற்க'' என்று அவன் எடுத்துரைத்தான்.

"எதற்கும் தடங்கலா? எனக்கு அமுதம் வேண்டாம். அவற்றின் மிக்க புகழே போதும். அதனினும் என் தோழன், என்னைச் சரண்புகுந்தோன் மகிழ்ச்சியே நான் பேணுகின்றேன். அரசன் ஆணையை மறுப்பார் அகல்க. ஏனோர் சென்று மலைதூக்கி இடுக கடலில்'' என்று சினந்து மொழிந்தான் மாபலி.

"என் உரை தெளியாய். எல்லாம் பின் தெளிவாய் உன்னைப்போல் தன் பகைவரை உறுதிப்படுத்தித்தான் தாழ்ந்து நிலைக்க விரும்புவர் எவர் உளர்? நன்றாக நிதானித்துப்பார். அமுதுண்டார் அழியார். உன் குல விரோதி அந்தத்தேவர். அவர் அமுதமுண்டு வலிபெற்றால் ஆவதென்ன? அறிந்தனையா? தேவர் உயர்ந்தார் என்றால் அசுரர் தாழாதென்செய்வர்?''

"குரோ! வணங்கினேன் உங்களை. தக்க சமயத்துத் தக்க விஷயத்தை ஞாபகமூட்டினீர்கள். ஊர்ந்து பற்றும்

பாம்புட்கூடச் சந்திரனைப் பிரையாங்காலை யகப்படுத்த முயல்வதில்லை. பூரணமாய் நின்றவன்றே பற்றி மிருகின்றது. பகைவனைத் தன்போல் வலியவனுக்கிப் பொருவதே முறை. பகைவன் மெலிவிடத்தும், படையிழந்து வெறுங் கையனுயபோதும், துணையில்லாத காலத்திலும், அஞ்சி ஓடியபோதும் எதிர்த்து அடிப்பது புகழுமன்று. அவ்வெற்றி வெற்றியுமாகாது. என்று நீங்களேயெனக்குப் போதித்தும் இருக்கிறீர்கள். இன்றிந்நியாயமும் கற்றீர் சொல்ல! தன் புத்திகெட்டு எப்போதும் பிறர்மனப்படி திரிபவனல்லன் நான். உங்கள் வாக்ய உல்லங்கனமன்று உண்மையையன்றி எவர் எது கூறினும் நான் கேளேன். இவ்விவண்பலைவனை வாசவன் தான் ஆதியிற்கூறியபடி உழைப்புக்கூலி இவர்க்குக் கொடுத்தால் கொடுக்கட்டும். என் கடமை அவன் துயர் தீர்ப்பது ஒன்றே. வேறில்லை.'' என்று கூறியபின் மாபலி படைவரை மலைபெயர்க்க ஏவிநின்றான்.

உறுவது உறும்போதன்றி உறுவதில்லை. போரில் ஆயிரம் மலைகள் யநாயாசமாகத்தூக்கி எறிந்த ஆற்றலாளர் பலர் ஒன்றுகூடித் தூக்கியும் அம்மந்தரம் துர்க்கரிதாயிருந்தது. இந்திரன் தேவரைச் சொணர்ந்தான். அசுரரும் தேவரும், அரும்பகை மாக்கள் இருவரும் ஒன்றுபட்டுத்தூக்கியகாலை மலை யிடம்கொடுத்துப் பெயர்ந்தது. பகைமையின்றி இருவர் மனம் ஒருமித்து முயன்றால் பெரியமலையும் பெயராது என் செய்யும்?

தூக்கி நெடுந்தூரம் நடந்தார்; அயர்ந்து கீழிட்டார். தோள் எல்லாம் வலி மிகுந்தது. வருந்தினர். இனித்தூக்கலாகாது என்று கூக்குரலிட்டார். அவர்கள்,

என் செய்வான் வாசவன்? அரியதென்று எண்ணிய கருமமும் ஒருவாறு நிறைவேறியது என்று எண்ணி அவன் மகிழ்ந்தான். அதற்குள்ளே வந்தது இடையூறு ஒன்று. தடுப்பரிதாகவும் அது மூண்டது ஐயனை நினைந்து உள்ளுறப்போற்றி உறுதுணை வேண்டினன்.

"எல்லாத்துயரும் இரித்தாண்டாய், எம்பெருமான்!
சொல்லால் மலைதூக்கிச் சேர்ந்தோம். துணையற்றோம்.
செல்லார் மணி நிறத்தாய்! சேர்ந்து எம்துயர்நீக்கி
வல்லே துணைபுரியவேண்டும், திருமாலே!"

அவ்வளவில் பெருங்காற்று ஒன்று எழுந்தது. அரக்கர் அசுரர் தேவர் என்ற பேதம் இன்றி எல்லாரும் தத்தளித்தனர். கருடன் தோன்றினன். மலையினைத்தூக்கிக் கடல் நடுப் பெய்துவிட்டு எல்லாரும் காண விண்ணூடறுத்தேகினன். தம்கடமை தம் தலைவர் பணிநிறைவேற்றுவதில் எவ்வறிஞர் பிறர் உபசாரம் புகழ் வேண்டிநிற்பர்! ஒருதுயர் நீங்கினர் அவர்கள். ஒஷதிநிறைத்தார். வாசுகியை வேண்டிக் கயிறாக்கினர். சந்திரன் அவர்க்கிரங்கி அடைதூண் ஆனன்.

இவ்வளவும் செய்து கடல் கடையலாம் என்று கருதும் போது மலை பாதி யாழ்ந்து மறையலாயிற்று "எத்தனை துன்பம், ஈஸ்வரா? நீ வந்து கடல் கடைந்து அருள்புரிவதாகக் கூறினையே. வந்தாள மறந்தனையோ? வேண்டுக இந்திரன் மன்று முகமன் வேண்டித் தாழ்த்தனையோ? அச்சுதா! அமலா!" என்றிரந்தான் இந்திரன்.

176807

8-வது அத்தியாயம்.

அஜிதருபத்தின் ஆண்டவன் வந்தான். மலையாழ்வது அறிந்து, தன் ஒரு கூற்றில் ஆமையுருக்கொண்டு நீரிற்பாய்ந்து முதுகில் மலை தூக்கினன். "கடையுங்கள்." என்றான்.

துன்பம் ஒன்று இங்கும்வந்து குறுக்கிட்டது. அசுரர், யாம் எளியால்லேலாம். எம்மை இகழவேண்டாம். உங்கள் துணையே இத்தேவர்க்கு உறுபொருள் கிடைத்தல் வேண்டும்." என்று கலாய்த்தனர்.

"உங்கள் எண்ணம் என்ன? என்றான்" அஜிதன்.

"வலியராய்த் துணைபுரிஞாய நாங்களிப் பாம்பின் வாலைப் பிடியோம்."

"எனிற்றலைப் பாற்றிருட்டு இழுங்கள்." இவ்விதம் அசுரர் ஒருபாலும் தேவர் ஒருபாலுமாகத் தொட்டீர்த்தனர். கடைந்தார். தளர்ந்து கை ஓய்ந்தார். பூவுலகத்தரசர் சிலரும் வந்து தம்வலி காட்டினர்.

ஆ! ஆ! என்ன பாவம்! முயல்வார் முயற்சிக்குத்தான் எத்தனை யிடைஞ்சல்கள் சம்பவிக்கின்றன. முயல்பவன் உள்ளத்துறுதியை, பலன் பெறுவதில் அவன் கொண்டுள்ள ஊக்கத்தைச் சோதிப்பதற்கெ வருவனபோலும் இடையூற்றுத் தொகைகள். மலையிற்சுற்றித் திரிக்கப்பட்டபோது அவ்விழுவை பொறாது அவ்வரவம் தன் கொடிய தீயன்ன விஷத்தைக் கான்றது.

கடலில் பரவி யக்கடுவிடம் அங்குள்ளாரைக் கருக்கத் துடங்கியது. அதுவே ஆலகாலம். தேவாசுர மனிதர்எல்லாம் அதன் கொடுமை தாங்காது தத்தளித்தார். திருமாலும்

சிறிது தாங்கிக்கருகினர். எல்லாருமாக அரனைப்போற்றி னர். 'ஆலகாலக்கடுமை தவிர்த்தருள்? என இரந்தார். அச்சுதன் மாயம் இது என உணர்ந்த அண்ணலும், ஆங்கு வந்து எய்தி அக்கடுவினை ஒழிக்கலாம் வகை வேறு காணு மையால் வாரி எடுத்துத் தன் வாய்ப்பெய்து கண்டத்து அடக்கினன்.

உழைநின்ற உமை நடுங்கினள். ஊர் எரி கொடுவிடம் தன் நாதனை என் செயுமோ என்று ஏங்கினள்? பரமனைத் தனி நிற்க அஞ்சிய கண்ணப்பன் ஏன் அவ்விதம் எண்ணி னன்? அவ்வன்பே உமையும் தன் நாதன் வலிமை மறந்து நடுங்கினள். அன்பினர் அன்புறு பொருளின் ஆற்றலை மறப் பது இயல்பே. தன் நாதனைக் கைகூப்பி வணங்கினள்.

வாய்திறந்து அவள் ஒன்று உரைசெய்யுமுன், பரமன், "ஒன்றுமில்லை. பார்வதி! என்மிடற்றடங்குட் இது. அதனால் யாம் நீலகண்டப் பேர் பெறுவோம். உலகத்துக்கு ஒரு எச் சரிப்பு ஆக அப்பாகம் கருத்து அமைக." என்று மொழிந் தான்.

உற்றவர் உறுதுயர் தீர்க்க விஷமும் உண்பார் அருள் உடையார்: முதுகு எலும்பை இந்திரனுக்கு ஈந்தான் ததீசி. சிபி ஒரு புறவினைக் காக்கத் தன் உடலையே தராசிடையிட் டான். ஒரு நாகனை உயிர்ப்பிக்கத் தன் உடல் இழந்தான் ஜீமூதவாகனன். இவ்விதம் எனையர் எனையர் என்று எண் ணுவாம்? உறுபுகழ்பெற்று உலகினைக் காத்தார் எல்லாம் தம் உயிர்மேல் ஆசையிலர், பிறர்துயர் களைவதே குறியாய் உழந்து காத்தாராவர்.

மேலும், "விஷம் எழுந்ததே. முதலிலேயே கண்ணிற் குத்து விழுந்ததே." என்று அஞ்சவேண்டாம். விரைவில்

உங்கள் ஆசை நிரம்பும்? உறுபொருள் பெறுவான் இந்திரன். அமுதமும் பெறுவீர்." என்று தேறுதல்கூறி நீங்கினான். உமையொருபாகத்து ஒருவன்.

பின் தேவாசுரர் கடைந்தெய்த்தபோது, அஜிதப்பெருமான் தன் இருகரமும் தொட்டு ஈர்த்து மதித்தான். மூதேவி எழுந்தாள். முதலில் "ஐயோ! முயற்சிப் பலனாக முதலில் விஷம் எழுந்து வாட்டியது. பின்னர் இவள் வந்தாள்; என்று தளர்ந்தான் இந்திரன்; எனினும், அமுதம் எழுங்காறும் கடைவதே துணிந்தான் மாபலி. லக்ஷ்மி எழுந்தாள். யாவரும் அன்னையென்று போற்றியார்வம் செய்தனர். அவளைத் தன்நெஞ்சு பொருத்தினான் அஜிதன். பின் இந்திரன் பொருள்கள் ஒவ்வொன்றாய் எழுந்தன. அவற்றை இந்திரற்கு ஈந்தான் அச்சுதன்.

பின் பாற்றுளிகளுக்கு இடையே ஒருபொற்குடம், மீனிடை மதியம்போலத் தோன்றியது. அமுதம்! அமுதம்!! என்று எல்லாரும் ஆரவாரித்தனர். அவ்வளவில் ஐயன் அதனை அங்கை ஏற்றான். கலகம் இன்றி யிருதிறத்தார்க்கும் பங்கிடுவதாகச் சொன்னான். இசைந்திருவரும் நிற்கையில் கண்டார் விரும்பும் காமர் உருக்கொண்டு வந்தாள் ஒரு மோகினி. "அம்மா! இது அமுதகுடம். இம்மாபலி முதலான அசுரர் துணையால் இந்திரன் இதனை யிப்பாற்கடலிலிருந்து பெற்றான். இதனை யிவர்க்குப் பங்கிட்டு அளிப்பாய்" என்று அஜிதன் அக்குடத்தினை யவள் கை நீட்டினான்.

அவளும் அவ்விதம் செய்வதாக உடன்பட்டாள். எனினும் தேவர்க்கே பெய்து மறைந்தாள். இவள் அத்திருமாலே. அசுரரை மயக்க இவ்வுருவம் கொண்டான் அவன்.

மயக்கித் தேவரை ஊட்டியகன்றான். சுக்ரன் எண்ணியதே முடிவாயிற்று.

அமுதம் தேவர் துய்த்தார். மாபலி சொல் நிரம்பியது. "இந்திரன் பொய்த்தால் என்? ஈசன் பொய்த்தால் என்? என் கடமை நிறைந்தது. நான் உள்மகிழ்ந்தேன். இனி ஓர் துயரும் இலன். பரந்தாமா! பலியின் செயலுக்கு உவந்து வந்து ஆண்ட உத்தமா! உன் அன்பினை என் என்று உரைப்பேன்! ஹே, புருஷோத்மா! 'அமுதம் பெற்றால் என்செயல் எல்லாம் புகழின்றி அதோகதியாகும்; கூலிக்குச்செய்ததாய் விடும்.' என்று எண்ணி நீ யிதுபுரிந்தாய். உன் அபார கருணைத்திறன் உணர்வார் யார்? அடியாரைப் பிழைபடாது காக்கும் உன் அருளை உடைய எனக்கு எது குறை? உய்ந்தேன். உய்ந்தேன்." என்று மகிழ்ந்தான் மாபலி.

பகைவன் தன்னைத் தஞ்சம் என்றிரப்ப ஏற்று அவன் குறைநீக்கி ஆண்டான் பலி. வாழ்க அவன் பெருந்தகைமை.

9-வது அத்தியாயம்

காமத்தால் பெயரும் மதிப்பும் இழந்த இந்திரன் தருக்கினால் தன் செல்வமும் இழந்தான். பின், பல துயர் உழந்து இழந்தன பெற்றான். காமமும் தருக்கும் கருத்தின் அகற்றிப் புகழ்படப்புரிவாரே உலகில் உறு செல்வராவர்.

நிற்க, மாபலி தான் கூலிபெற மனம் இல்லாதகன்றான். ஆயினும், அவன் உழையர் அது பொறாதகல விரும்பிலர். தேவரை மலைந்தார். போர்மூண்டது. தன் இனத்தலைவரும் குரவரும் வேண்ட மாபலியும் அத்தேவரொடு பொருதான். திரும்பவும் இந்திரன் பொருளும் நாடும் அசுரர்கை நீட்டிச் சென்று வருந்தினான். வாமனனாய் வந்து திருமால் தன்னை ஊன்றும்வரை பெருந்துயர் தாங்கினான் அவ்வேந்தன்.

காதலும் கற்பும் ஓங்குக:
எங்கணும் கருணையும் வீரமும் ஓங்குக.
புகழுடைத் தயர்க புவியெலாம் இனிதே. சுபம்!!!

வந்துவிட்டது! எது? வந்துவிட்டது!

லால்குடி சே. கந்தசாமியால் எழுதப்பட்ட

'ரோஜாதேவி'

அல்லது

பதினெட்டு வருஷப் புதையல்.

புதுமுறையில் எழுதப்பட்டு அழகான பைண்ட் செய்யப்பட்டது!

தேசபக்தி ததும்பி திடுக்கிடும் சம்பவங்கள் மலிந்து நவரசம் திகழும்
இது உங்களுக்கு புதுப் புத்தகமாகத் தோன்றுகிறதா?
அப்படியானால், நீங்கள் ஒருவர்தான் இன்னும் இதைப்படித்து
ஆனந்திக்கக் கொடுத்து வைக்காதவர் ஆனீர்!
நீங்கள் ஒருவரே ஒப்புயர்வற்ற இப்புதையலை இன்னும்
அனுபவிக்கப் பாக்கியம் பண்ணாதவர்கள்!
உங்களுக்கு ஏன் அந்தக்குறை? உடனே தவறாமல்
ஆர்டர் கொடுங்கள்! ஏன் என்றால்

சிறந்த நாடகாசிரியரால் எழுதப்பட்ட எத்தனையோ நாடகங்களையும், நாவலாசிரியர்களால் எழுதப்பட்ட நாவல்களையும், கதாசிரியர்களால் எழுதப்பட்ட கதைகளையும் படித்திருந்தாலும் புத்தப் புதிதாய் வெளிவந்திருக்கும் இதைப்போன்ற ஒப்பற்ற நூலை இது வரையில் வாசித்திருக்கமாட்டீர்கள். என்றே உறுதியாய்க் கூறுகிறோம். நவ ரசந் ததும்பி தேசபக்தி ஒழுகும் இக்காலத்திற்கேற்ற இந்தப் புத்தகத்தில் உங்களைப் பரவசப்படுத்திக் கல்லையும் கனியச் செய்யும் பல காட்சிகள் நிறைந்திருக்கின்றன. பிரசுரமான முதல் வாரத்தில் விளம்பரம் இல்லாமலேயே முந்நூறு புத்தகங்கள் செலவாயின என்றால் இதன் அருமை பெருமையை என்னவென்று சொல்லுவது?

விலை ரூ. 1—8—0 தபாற்கூலி அணா 4.

சிலகாப்பிகளே மிகுந்திருப்பதனால் மறுமுறைகிடைப்பது அருமை.

செல்லம்மாள் என்னும் செல்வச்சிறுமி.

இச் சிறந்த புத்தகத்தில் கருணையைப்பற்றி வெகு விரிவாகக் காட்டப்பட்டிருப்பதுடன் ஸ்திரீகளுக்குத் தமது கணவர் மேலுள்ள, வாஞ்சையையும், எண்ணிறந்த நீதிகளையும் காட்டப்பட்டிருக்கிறது, கற்பின் மகிமையை நன்ருய் விளக்கப்பட்டிருக்கும் இதன் விலை ஆகிற ஒரு அணுவுக்குப் பல மடங்கு பெரியதாயிருக்கும். இப் புத்தகத்தால் அறியப்படும் விஷயங்கள் என்று கவிராயர்களாலும் பத்திரிகைகளினுலும் புகழப்பட்டது.

விலை அணு ஒன்று. தபாற்கூலி வேறு.

தனபாலன் அல்லது விஷக்கத்தி.

ஸ்கூல் இன்ஸ்பெக்டர்கள், தலைமை உபாத்தியாயர்கள், பத்திரிகைகள் முதலியோரின் அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்றது! எல்லாராலும் விரும்பப்படுவது!

துரைத்தனத்தார் அங்கீகரித்தது.

ஒரு காரியத்தைச்செய்ய ஆரம்பிப்பதற்கு முன் இதைச் செய்யலாமா? கூடாதா? என்று தீர யோசித்து நல்லதாகவும், பிறருக்குத் தீங்கு தராததாயுமிருந்தால் அதைச் செய்யவேண்டும். அப்படிக்கின்றி, செய்தபின் யோசித்துக்கொள்ளுவோம் என்று ஒரு காரியத்தைச் செய்ய, முன் வருவது மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்குவது போன்றது என்னும் சிறந்த நீதியைப் போதிக்கவேண்டியே நாடகரீதியில் எழுதப்பட்டிருக்கிறது.

இதில் சகோதர வாஞ்சை, பெரியார் பெருந்தன்மை, வீரர் இலக்ஷணம், துஷ்காரியம், செய்யும்போது மனம் புத்தி கற்பித்து நல்வழியில் திருப்புவது, கடவுளை நம்பினேர் அடையும் இன்பம், லாபம் முதலியவற்றை எளிதில் விளங்கும்படி மிகவும் தெளிவாய் எழுதப்பட்டிருக்கிறது.

விலை அணு இரண்டுதான். தபாற்கூலி வேறு.

அருணேதயம் ஆபீஸ்,

எட்டயாபுரம்.

S. A. திருமலைக்கொழுந்து அவர்களால்
எழுதப்பெற்ற
"பிரசண்டமாருதம்"

ஆங்கில மஹா கவியாம் சேக்ஷ்பியரால் செய்யப்பட்ட நாடகத்திலொன்றதாய "டெம்பஸ்ட்" (The Tempest) என்னும் சிறந்த நூலின், அரிய செந்தமிழ் மொழிபெயர்ப்பு.

கொஞ்சப் பிரதிகளை கைவசமிருக்கின்றன.

விலை அணா 6.

தபாற்செலவு பிரத்தியேகம்.

அம்புஜம் அல்லது அதிசயக் கள்வன்.

அருணோதயம் ஆசிரியரால் வரையப்பட்ட அருமையான துப்பறியும் நாவல். பின்புத்தியினால் வருந்திய அம்புஜத்தின் ஆருத்துயரும், தன் காதலர் அடையும், துன்பத்தின்மேல் துன்பமும், பெண்களைத்திருடி விவசாரவர்த்தகம் செய்யும் தூர்த்தர்களை, அம்புஜத்தின் காதலர், சாந்தசீலர் துப்பறியச் செல்வதும் வெகு இனிமையாயிருக்கும்.

விரைவில் வெளிவரும். விலை ரூ ஒன்று.

முன்பே தம் பெயர்களைப் பதிவு செய்துகொள்வோருக்கு
தபால் செலவு இனாம்.

அருணோதயம் ஆபீஸ்,
எட்டயாபுரம்.

மாணிக்கவல்லி

அல்லது

ஓர் மாதின் மர்மம்.

இந்நாவலில் கதாநாயகியாக வரும் மாணிக்கவல்லி யென்னும் அழகிய பெண்ணனவள் ஓர் நாடகசாலையில் சேர்ந்து பல நாடக விஷயங்களில் பிரக்யாதி பெற்றவளாயும், ஆடல் பாடல் முதலிய வற்றில் நற்கியாதி பெற்றவளாயும், இம்மாதின் உயர்தர ஆடல் பாடல்களைப் பார்க்கவரும் பிரபுக்களுக்கு மிக்க ஆனந்தத்தை உண்டுபண்ணுபவளுமாகிய இவளுடைய சௌந்தரியத்துக்கும் நடையுடை பாவனைக்கும் மெச்சி நாடகம் பார்க்கவரும் பிரபுக்கள் ஒருவருக்கொருவர் தெரியாமல் இம் மாணிக்கவல்லியின்மீது காதல் கொள்வதும், அவளால் வெறுத்துத் தள்ளப்பட்ட ஒருவன் செய்யும் சூதும், கதாநாயகி மாணிக்கவல்லியின் விசனமும், அவளைக் காதலிக்கும் புருஷர்களின் தந்திரமும் படிக்கப்படிக்க இனிமையாகயிருக்கும்.

இக்கதையை வாசிக்கும் சகோதர சகோதரிகளுக்கு ஓர் நாடகத்தையே நேரில் பார்ப்பதுபோலவிருக்கும்.

விலை ரூ 1. தபால் சார்ஜ் வேறு

அற்புத விகடன் அல்லது வஞ்சகநாதனும் லெஞ்சப்பிரியனும்

மநுநீதி தாவா சரிநீதி தீர்ப்பு. விலை அணா 1.

பெண்புத்திப் பிரகாசிகை.

ஆடவரும் பெண்டிரும் அவசியம் வாசிக்கவேண்டிய அருமையான நூல்

விலை அணா 1.

அருணோதயம் ஆபீஸ்,

எட்டயாபுரம்.

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

இதுவரை வெளியாகததும், நீடித்த நாட்களாய்
அநேகர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்ததுமாகிய

பாஞ்சாலங்குரிச்சி (சண்டை) சரித்திரம்.

வெளிவந்துவிட்டது!!!

திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள பாஞ்சாலங்குரிச்சிப் பாளையப்பட்டை 129 வருஷங்களுக்கு முன் அரசாண்ட

"கட்டபொம்மு," "ஊமைத்துரை"

அவர்கள் அரண்மனையில் வேலைபார்த்த தானாவதி

"சுப்பிரமணியபிள்ளை"

ஆகியவர்களைப்பற்றிய விஷயங்களடங்கியது.

விலை அணா 12.

பரிமள ஆங்கிலம்.

1500, English Idiomatic Sentences with Tamil equivalents, Specimen Letters, Petitions, Complaints Etc., etc.

இம்மாதிரிப் புத்தகம் இதற்குமுன் வெளியாகவில்லை. இப்புத்தகம் மாணவர்களுக்கும் ஆங்கில பாஷையைக் கொஞ்சங் கற்றவர்களுக்கும் மிகுந்த பிரயோஜனமுள்ளது.

1500 ஆங்கிலத் தொடர் மொழிகளாலுண்டான வாக்கியங்களும், அவற்றின் தமிழ் அர்த்தங்களும், மாதிரிக் கடிதங்கள், மனுக்கள் பிராதுகளும் அடங்கியவை. பின்பு தமிழ் இங்கிலீஷ் அகராதியும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

விலை ரூ 1—8—0 தபால் சார்ஜ் வேறு.

அருணோதயம் சந்தாதார்களுக்கு ரூ 1—4—0

அருணோதயம் ஆபீஸ்,
எட்டயாபுரம்.

இரண்டாம் பதிப்பு. இனிய மதிப்பு.

மர்மங்களை வெளியாக்கி விபரீதச் செயல்கள் பல புரிந்துவந்த துர்ச்சனனை தும்சஞ்செய்த துப்பறியும் சிஙகத்தின் தீரச்செயலை உண்மையாய் உணரவேண்டுமானல்? அழகிய மூன்று சித்திரப்படக் காக்ஷியுடன் கூடிய

மர்மமுகி அல்லது ரஸாயனக்கள்வன்

என்னும் புத்தகத்தை வாங்கிப் படியுங்கள்.

(ஓர் இனிய துப்பறியும் நவீனம்)

'மர்மமுகி' என்ற பெயரே பல 'மர்மங்கள்' இக்கதையில் அடங்கி யிருப்பதற்கு அத்தாட்சி என்று உங்களுக்குத் தோன்றவில்லையா? கள்வர் கன்னம் வைத்தும், சுவரேறிக் குதித்தும் திருடுவதுபோக ரஸாயன முறையில் மிகவும் மர்மமாக இன்னல்கள் விளைவிப்பதை விவரமாய் அறிய நீங்கள் விருப்பங்கொள்ளவில்லையா? மிக சாமர்த் தியவான்களான இத்துஷ்டர்கள் கடைசியில் எப்படி தும்சஞ்செய் யப்படுகின்றனர் என்பதை நீங்கள் அறியவேண்டாமா? துப்பறியும் சிங்கமாகிய கஜபதி என்பவர் காட்டும் அபூர்வ தந்திர சாமர்த்தியங் களும், விடாமுயற்சியும், ரஸாயனக்கள்வனின் விநோதச்செயல் களும், தந்திரங்களும் படிக்கப்படிக்க ஆச்சரியமாயிருக்கும். நாம் நமது உயிர் நண்பன் என்று நம்பியிருப்பவனே உண்மையில் நல் லோரின் நமனாக ஆவது அதி அற்புதமாயிருக்கும். சுருங்கச்சொல் லின் படிக்கப்படிக்கப் பரமானந்தமாயிருக்கும் நவீனமிதுவே! கேட்கக் கேட்கத் தெவிட்டாத நாவலும் இதுவே!

விலை அணா 12.

நரகு தாமோதரன்.

ஓர் இனிய தமிழ் நாவல். விலை அணா 2.

அருணோதயம் ஆபீஸ்,
எட்டயாபுரம்.

800 003

17/801

ஞானனந்தன் அல்லது பிரளயத்தில் கண்டெடுத்த பாலன்.

(Approved by the Text-Book Committee மிஸ்டர். ஏ. டேவிட் எழுதியது). 3–ம் பதிப்பு கதாநாயகனுகிய ஞானனந்தன் குழந்தைப்பருவத்தில் வெள்ளத்தில் அடித்துக்கொண்டு போக, அக்குழந்தை இறந்துபோனதாக அதன் பெற்ருேர் துக்கித்து வருந்துவதும், பின்னர் அது அற்புதமாக ஓர் பெருத்த சீமான்வீட்டில் சுகமாக வளர்க்கப்பட்டு, கல்வி முதலியவை கற்றுப் பூரண பாண்டித்திய மடைந்து யௌவன புருஷனுனபோது, பெற்ருேர் ஆச்சரியமான விதமாகத் தமது புத்திரனைக் கண்டு ஆனந்திப்பதும் ஆகிய விஷயங்கள் விமரிசையாக விளக்கப்பட்டுள்ள. பாகங்களில் முறையே சோகரசமும், ஆனந்தரசமும் ததும்பி நிற்கின்றன. வாசிக்க வாசிக்க வெகு இனிமையாக இருக்கும். வாசிக்கத் தொடங்கியபின் புத்தகத்தைக் கீழேவைக்க மனம் வராது. இக்கதையைப் படித்தபின்னரே, இதன் அருமை பெருமை தெரியும். இவ்வரிய நாவலின் அருமையை நன்கறிந்த் சென்னை அரசாங்கத்தார் ஷை நாவலைப் பள்ளிக்கூடங்களில் பாட புத்தகமாக வைக்கலாமென்று சிபார்சு செய்ததின் பலனுக அது S. S. L. C. Examination 1926 வருஷப் பரிக்ஷைக்கு பாடப்புத்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது. இது ஒன்றே இந்த நாவலின் அருமையையும் பெருமையையும் காண்பிக்கப் போதுமானது.

விலை ரூ 0—11—0

அருணேதயம் ஆபீஸ்,
எட்டயாபுரம்.

அருணோதயம்.

எட்டயாபுரத்தினின்று மாதமொருமுறை
வெளிவரும் உயர்ந்த தமிழ் சஞ்சிகை.

பல அறிஞர்களின் சிறந்த கட்டுரைகளும், நாவல் பகுதி, செய்முறைப்பகுதி, நூதனச்செய்தி, செய்தித் திரட்டு முதலிய ருசிகரமான சமாச்சாரங்களையும் கொண்டு வெளிவருவது.

பல பெரியார்களாலும், பத்திரிகைகளாலும் புகழ்ந்து பேசப்படுவது.

புத்தகரூபமாய் தைப்த்துக்கொள்வதற்கு ஏற்றுப் போல், சௌகர்யமான அளவில் 52 பக்கங்களுக்குக் குறையாமல் வெளிவருகிறது.

வருடம் ஒன்றுக்கு தபாற்சிலவுட்பட	ரூ	1¼.
ஷை புறநாட்டிற்கு	ரூ	1½.

அருணோதயம் ஆபீஸ்,

எட்டயாபுரம்.

தென்னிந்தியா.

சரஸ்வதி பிரஸ், கோவில்பட்டி.